1990 ஏப்ரல் 26]

(ஆ) மேற்படி துணை மின் நிலையத்தை நிறுவும் பணிகள், நிதி வசதிக்கேற்ப 1990-91-ல் துவக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. ப. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் நீண்டகாலமாக நிலுவையில் இருந்து வருகிறது. அந்தப் பகுதியிலே இருக்கிற விவசாயிகள் பெரும்பாலும் இந்தத் திட்டத்தை எதிர்பார்த்திருக்கிறார்கள். பல விவசாயக் கிணறுகளின் பம்ப்செட்டுகள் மின் அழுத்தம் குறைவின் காரணமாக பழுதடைந்து விடுகின்றன. ஆகையால் இந்தத் திட்டத்தை இவ்வாண்டே எடுத்துக் கொண்டு அரசு செயல்படுத்த முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதைத்தான் நான் சொன்னேன். நிதி ஒதுக்கம் கூட 59 இலட்சம் ரூபாய்க்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதற்காக 4.5 ஏக்கர் நிலம் கடந்த மார்ச் மாதத்திலே ஆர்ஜிதம் செய்திருக்கிறார்கள். எனவே, நிச்சயமாக இந்த ஆண்டு எடுத்துக் கொள்வதற்கு எல்லா முயற்சிகளையும் அரசு மேற்கொள்ளும்.

திரு. ப. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தினுடைய மின் சக்தியினுடைய அளவு எவ்வளவு? எத்தனை மின் இணைப்புக்குப் பயன்படும்? வடமதுரை, குஜிலியம்பாறை பகுதிகளிலும், வேடசந்தூர் தொகுதியில் இது போன்ற திட்டங்கள் இருந்து வருகின்றன. அது இந்த ஆண்டு நிறைவேற்றப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இவ்வாண்டு 1x5 எம்.வி.ஏ. டிரான்ஸ்பார்மர் ஒன்று அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தாட்கோ மூலம் தொடங்கப்பெற்ற தீப்பெட்டித் தொழிற்சாலைகள்.

*5763 திரு. எம். முத்தையா : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஒட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியத்தில் தாட்கோ மூலம் தொடங்கப்பெற்ற 20 தீப்பெட்டித் தொழிற்சாலைகள் இயங்காமல் இருப்பதற்கான காரணம் என்ன?

[1990 ஏப்ரல் 26

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

ஒட்டப்பிடாரம் ஒன்றியத்தில் 22 தீப்பெட்டித் தொழிலாளர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. இதில், 1988-89-ல் 9 சங்கங்கள் செயல்பட்டன. நடப்பு ஆண்டில், மேலும் 6 சங்கங்கள் செயல்பட ஆரம்பித்தன. மீதமுள்ள 7 சங்கங்களிலும் உற்பத்தியைத் தொடங்க, பாரதி சிறு தீப்பெட்டித் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கச் செயலாளரும் மற்றும் இரண்டு தனி அலுவலர்களும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

திரு. எம். முத்தையா : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தீப்பெட்டித் தொழிற்சாலைகளுக்கு வேறு ஒரு சங்கம் தொடங்கப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். அதற்கு என்ன காரணம்? ஒட்டப்பிடாரம் தாலுக்காவிலே உள்ள தீப்பெட்டித் தொழிற்சங்கத்திற்கு, எட்டையபுரம், கோவில்பட்டி தாலுக்காவிலே பால் சொசைட்டி தலைவராக இருப்பவர்தான் இந்தத் தொழிற் சங்கத்திற்கும் தலைவராக இருக்கிறார். மேலும் அவரே தனியாக தொழில் நடத்துகிறார். இங்கே பர்ச்சேஸ் பண்ணிய சாமான்களெல்லாம் அங்கே போய் விடுகின்றன. இதனால் இந்த சொசைட்டி சரியாக இயங்கவில்லை. மேலும் அவர் ஒட்டப்பிடாரத்திலிருந்து எட்டையபுரம் வர வேண்டுமென்றால் இரண்டு, மூன்று பஸ் ஏறி வரவேண்டி இருக்கிறது... (மணியடிக்கப் பெற்றது)

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 7 சங்கங்களுடைய செயல்பாடுகள் இன்னும் துவக்கப்படாததினுடைய காரணம், இன்னும் கொடுக்க வேண்டிய நிதி கிட்டத்தட்ட 2 இலட்சத்திற்கு மேற்பட்டு கொடுக்க வேண்டியிருக்கிறது. அதைக் கூடிய விரைவிலே கொடுத்து, இச்சங்கங்களுக்கு புத்துயிர் தருவதற்கும் தரமுள்ள தீப்பெட்டி பண்டல்களை உற்பத்திச் செய்ய வேண்டியும், இதற்கான திட்டத்திற்கு ஒப்படை செய்யப்பட்டதோடு நிதி வாய்ப்பைப் பெருகச் செய்யவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். முத்தையா: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த சொசைட்டி ஆதி திராவிட நலத்துறையிலே இருந்து தாட்கோ மூலமாக அரிஜனங்களுக்காக ஏற்படுத்தப்பட்ட சொசைட்டி. கோவில்பட்டி, எட்டையபுரத்திலேயுள்ள பால் சொசைட்டிக்குத் தலைவராக இருப்பவர் இதிலும் தலைவராக இருக்கிறார். பாரதியைவிட ஒட்டப்பிடாரம் வ.உ.சி. எந்த விதத்திலும் குறைந்தவர் இல்லை. ஆகவே, ஒட்டப்பிடாரத்திலேயுள்ள சொசைட்டிக்கு ஆதி திராவிட சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவரைத்தான் தலைவராகப் போட வேண்டும்.

1990 ஏப்ரல் 26]

அப்படி இல்லையென்றால் தாட்கோ அதிகாரிகள் மூலமாக அந்தச் சங்கத்தை இயக்க வேண்டுமே தவிர, அப்படியில்லாமல் தனியார் துறையிலே கொடுத்தால் அது சரிவர இயங்காது. ஆகவே, இது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நன்கு ஆராய்ந்து, இந்த சொசைட்டியை அரிஜனங்கள் மூலமாக இயக்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

10-05 மணி

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது பற்றிய நிர்வாகத்திற்காக ஸ்பெஷல் ஆபீஸர் ஒருவரை நியமித்திருக்கிறோம். மேற்படி தவறுகள் குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விவரம் கொடுத்தால் அரசு தக்க நடவடிக்கை எடுத்து ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இரண்டு துணை வினாக்கள் தான் கேட்க முடியும். மூல வினாக் கொடுத்தவர் மூன்றாவது துணை வினாக் கேட்க முடியாது. (குறுக்கீடு)

திரு. எம். முத்தையா : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாட்கோ அதிகாரிகளிடம் பல தடவை முறை யிட்டோம். அவர்கள் நடவடிக்கை எடுக்காததன் காரணமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதுபற்றி நன்றாக ஆராய்ந்து தாட்கோ அதிகாரிகளைக் கேட்டு எனக்கு பதில் சொல்ல வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : துணைத் தலைவர் அவர்களே, இதுபற்றி தாட்கோ நிர்வாகத்தினரை அணுகி விவரத்தைக் கேட்டு கூடிய விரைவில் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பயிற்சி மருத்துவர்களுக்கான உதவித் தொகை.

* 754 திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சோவியத் நாட்டில் மருத்துவக் கல்வி பயின்ற தமிழக மாணவர்கள் இங்குள்ள மருத்துவக் கல்லூரிகளில் பயிற்சி மருத்துவர்களாக (House Surgeon) இருக்கும்போது உதவித் தொகை வழங்கப்படுவதில்லை என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?